Volume 8 Issue 1 August 2026 E-ISSN: 2582-2063

# பண்ணை மூன்றடைப்பு காவடி நடுகல்

**முனைவர் சி. செல்லப்பாண்டியன்**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை

## முன்னுரை

உலகில் ஒவ்வொரு சமூக மக்களுக்கும் சமய நம்பிக்கைகள் இருந்து வருகின்றன. அந்தச் சமய நம்பிக்கைகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. உலகின் தொல் குடிகளில் ஒன்றான தமிழர்களும் சமய நம்பிக்க்களில் ஆர்வம் கொண்டிருந்தனர் . சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அதாவது வரலாற்றுக் காலத்திற்கு முன்னதாகவே இயற்கை நம்பிக்கைகள், சடங்குகளைச் செய்துள்ளனர் தமிழர்கள் . பெருங்கற்காலத்தில் இறந்தவர்களைப் புதைத்து அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் விரும்பும் உணவுகளை படையலிட்டு வந்துள்ளனர். இது மனிதன் இறந்த பின்னர் ஆன்மா அழிவில்லாமல் தங்களைக் காத்து வருவது நம்பிக்கையாகும் . அந்த ஆன்மாவைத் திருப்திபடுத்தவே பல்வேறு சடங்குகளைச் செய்தனர் . இவற்றின் பரிணாம வளர்ச்சியே சமய திருவிழாக்களிலும் இறைவனை வழிபடும் பூஜைகளிலும் செய்யப்படும் சடங்குகளாகும்

## நாட்டார் வழிபாடும் சடங்குகளும்

தமிழர் வழிபாட்டு முறைகளில் பெருந்தெய்வ வழிபாடு , சிறுதெய்வ வழிபாடு என்ற இரண்டு பெரிய பிரிவுகள் உண்டு . இவற்றில் சிறுதெய்வ வழிபாடு என்பது சாமானிய மக்களால் பெரிதும் பின்பற்றப்படும் வழிபாட்டு முறையாக தொடர்கிறது. நாட்டார் வழிபாட்டுத் தெய்வங்கள் இனக்குழு தெய்வங்களாக விளங்குகின்றன. பொதுவாக நாட்டார் வழிபாட்டு தெய்வங்கள் எல்லாம் கொலைப்பட்டதாகவே இருக்கும் என்கிறார் ஆய்வாளர் ஆ .சிவசுப்பிரமணியன். இக்கொலைப்பட்ட தெய்வத்திற்கு கதைகள் உருவாக்கப்பட்டு காலம் காலமாக மக்களிடையே இருந்துவரும் இந்த தெய்வங்கள் அவ்வினக் குழு சார்ந்த மக்களிடையே பேசும் என்ற நம்பிக்கை உள்ளது அந்த நம்பிக்கையே சாமியாடுதல் என்ற நிகழ்வாகும். தென்மாவட்டங்களில் பரவலாக வழிபடப்படும் சுடலை மாடன் , கருப்பசாமி, முத்தாரம்மன், மாரியம்மன், இசக்கியம்மன், அய்யனார், சீலைக்காரி உள்ளிட்ட தெய்வங்கள் நாட்டார் வழிபாட்டு முறையைச் சார்ந்ததாகும் . இதன் வழிபாடுகள் ஒவ்வொரு கிராமத்திற்குத் தகுந்தாற்போல் வேறுபடுகிறது . நம்பிக்கைகள், சடங்குகள், பலியிடுதல் உள்ளிட்டவைகளும் மாறுபடுகின்றது . உதாரணமாக தூத்துக்குடி அருகே விளங்கும் ஈனமுத்துச்சாமி வழிப்பாட்டுக் கதையில் பிராமணப் பெண்ணைக் காதலித்த்தால் ஈனமுத்து கொலை செய்யப்படுகிறான். அவனுடன் அவன் காதலியான பெண்ணும் பாப்பாத்தி அம்மன் என்ற பெயரில் வழிப்படப் படுகிறாள் . பாப்பாத்தி அம்மன் சிறு தெய்வமாக இருந்தாலும் இந்த அம்மனுக்கு உயிர்பலி கிடையாது . சர்க்கரைப் பொங்கல் , தேங்காய் மற்றும் வாழைப்பழம் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது . ஆனால் ஈனமுத்து வழிபாட்டில் உயிர்பலி உண்டு . எனவே தமிழர் வழிபாட்டில் சிறுதெய்வ மற்றும் பெருந்தெய்வ வழிபாட்டு முறைகள் பல இடங்களில் பின்பற்றப்படுகிறது எனக் கூறப்படுகிறது.

## பண்னை மூன்றடைப்பு பெயர்க் காரணம்

அருப்புக் கோட்டை அருகே சமணச் சின்னங்கள் காணப்படும் கோவிலாங்குளம் கிராமத்திற்கு கிழக்கே நான்கு கி.மீ தொலைவில் அமைந்துள்ள கிராமம் பண்ணை மூன்றடைப்பு ஆகும். கரிசல் பகுதியாக இக்கிராமத்தில் விவசாயம் முக்கியமான

தொழிலாகும். மதுரை நாயக்கர் ஆட்சி காலத்தில் சேது நாட்டின் நிர்வாகப் பிரிவில் திருச்சுழி, பரளச்சி, தொப்பலாக்கரை உள்ளிட்ட கிராமங்கள் இருந்து வந்தது . பருத்திக்குடி நாடு என்று வழங்கப்பட்ட இப்பகுதியில் ஏராளமான கிராமங்கள் இருந்து வந்தன. அவற்றில் இன்றைய திருச்சுழி தாலுகாவிற்குட்பட்ட கிராமங்களும் அடக்கம். இக்கிராமங்களில் திசைக் காவல் பணியில் உள்ளூர்த் தலைவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு நிலம் , பணம், உள்ளிட்டவை மானியமாக அளிக்கப்பட்டன. மதுரை நாயக்கர்களின் பாளைய அரசாக இருந்த சேது நாட்டின் கீழ் பல்வேறு அம்பலக்காரர்கள் திசை காவல்காரர்களாக நியமிக்கப்பட்டனர் இந்த திசை காவல் நியமனத்திற்கு அரசர் மற்றும் பாளையக்காரர் அனுமதி அவசியம் . ஏனெனில் அவர் மூலமாகவே வரி மற்றும் கிராமக் காவல் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் திருமலை நாயக்கர் சேது நாட்டின் கிழவன் சேதுபதியுடன் திருச்சுழி பருத்திக்குடி நாட்டுப் பகுதிகளில் காவல் பணிகளை ஆய்வு செய்ய வந்திருந்தார் . அப்பொழுது மூணடைப்பு கிராமத்தில் திசை காவல் பணியில் ஈடுபட்டிருந்த குப்பச்சி அம்பலக்காரன் என்பவர் மன்னர் திருமலை நாயக்கரைச் சந்தித்து சீனி , சக்கரை காணிக்கை வைத்து தனக்கு மூண்றடைப்பு கிராமத்தின் திசை காவலுக்காக புஞ்சை மற்றும் நஞ்சை நிலத்தையும் மூணடைப்பு கிராமத்தில் உள்ள கண்மாயில் ஒரு செய் நிலமும் மானியமாக பெற்றதோடு அவற்றை செப்புப் பட்டயத்தில் பொறித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். திருமலை நாயக்கரும் அவரின் வேண்டுகோளை ஏற்று செப்புப் பட்டயம் கையொப்பமிட்டு வழங்கினார் . இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள மூணடைப்பு என்ற பெயரே பின்னாளில் மூன்றடைப்பு என்றாகி பின்னர் பண்னை என்ற முன்னொட்டு இணைக்கப்பட்டுள்ளது . பண்ணை என்பது பாளையக்காரர் தலைவனைக் குறிக்க பயன்பட்ட"பண்ணையாராக இருக்கலாம்

**வழிபாட்டில் காவடி**

தமிழர் வழிபாட்டில் காவடி என்பது நாட்டார் வழிபாட்டில் இருந்த ஒன்றாகும் . தமிழ் இலக்கியத்தில் காவடி என்பது காவுதடி (காவுதல் + தடி) என்ற சொல்லிலிருந்து உருவானது. நீண்ட தடியின் இருமுனைகளிலும் காணிக்கை பொருட்கள் பால்குடம், தண்ணீர் குடம், ஆகியவற்றை தொங்கவிட்டு நடுப்பகுதியைத் தோளில் வைத்துச் சுமப்பது காவடி ஆகும் . இது பின்னாளில் முருகன் வழிபாட்டின் அடையாளமாக மாறிவிட்டது. வழிபாட்டு பயன்பாட்டைத் தவிர்த்து சுமை தூக்கிச் செல்லவும் ஆற்றிலிருந்து நீர் எடுக்கவும் பயன்பட்டது காவடி இருப்பினும் தமிழகத்தில் காவடி என்பது வழிபாட்டுப் பொருளாகவே அதிகம் அறியப்படுகிறது . பிற்காலத் தமிழ் பக்தி இலக்கியங்கள் முருகனின் வழிபாட்டுச் சடங்குகளில் காவடியை குறிப்பிட்டே எழுதியுள்ளன. முருக வழிபாட்டில் காவடி இடம்பெறும் போது முருகனின் வாகனமான மயிலின் இறகும் முருகனின் உருவமும் இடம்பெற்றன . முருகனின் காவடி வழிபாட்டை இசையுடன் இணைத்து காவடிச் சிந்து இலக்கியம் படைக்கப்பட்டது. முருகனுக்கு காவடி எடுத்து ஆடிச் செல்லும் போது பாடுவதற்காக தனித்துவமாக உருவாக்கப்பட்டதே நாட்டுப்புற இசை வடிவம் காவடிச் சிந்து ஆகும் எனவே காவடி என்பது பக்திக் காவடியாட்டம் என்று முருக வழிபாட்டிலும் ஆட்டக் காவடியாட்டம் என்று பொது மக்கள் கலைவடிவமாகவும் திகழ்கிறது

**காவடி நடுகல்**

மேற்குறிப்பிட்ட செய்திகளிலிருந்து "காவடி" என்பது முருக வழிபாட்டில் இடம்பெறும் அம்சமாக இருந்து வந்துள்ளது காவடி . சிறு தெய்வ வழிபாட்டிலிருந்து முருகன் பெருந்தெய்வ வழிபாட்டிற்கு மாற்றப்பட்ட பின்னரும் இந்த காவடி வழிபாடு தமிழகத்தில் தொடர்ந்து வருகிறது . அதற்கான சான்றுகள் கோவில் தூண்களிலும் கோபுரங்களிலும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளது . அது போல நடுகல் எடுத்தும் வழிபட்டுள்ளனர் என்ற செய்தி சிறப்பானதாகும் . அந்த வகையில்

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தாலுகா பண்ணை மூன்றடைப்பு கிராமத்தில் சாலையோரத்தில் ஒரு நடுகல் காணப்படுகிறது . அக்கல்லில் காவடி எடுத்தல் சூலாயுதம் செதுக்கப்பட்டுள்ளது. இந்த நடுகல் 3 அடி உயரமும் 1.5 அடி அகலமும் கொண்டது. இதில் சூலம், சூலத்திற்கு கீழே வலது பக்கம் ஒருவர் காவடி தூக்குவது போலவும் இடது பக்கம் இராம சேது என்ற எழுதுப் பொறிப்பும் காணப்படுகிறது . இந்த பண்ணை மூன்றடைப்பு கிராமம் நாயக்கர் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் விருதுநகரில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் பாதையாக இருந்திருக்க வேண்டும் . எனவே இப்பாதையை கோவிலுக்குச் செல்பவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும் பொதுவாக அக்காலத்தில் கோவில்களுக்கு வேண்டுதலுக்காக காவடி எடுப்பது வழக்கம். அதைப் போல ராமேஸ்வரம் கோவிலுக்கு காவடி எடுத்துச் சென்ற வீரனின் நினைவாக எடுக்கப்பட்ட நடுகல்லாக இருக்கலாம் அல்லது இராமேஸ்வரம் கோவிலுக்கு வேண்டுதல் பொருட்களை காவடியாகக் கொண்டு சென்ற வீரனின் நினைவாக எடுக்கப்பட்ட கல்லாக இந்த நடுகல் இருக்கலாம் . பொதுவாக ராமநாதபுரம் பகுதியை சேது நாடு என்று குறிப்பிடுவது அக்கால வழக்கம் . அதை நினைவு கூறும் விதமாக சேது நாட்டிலுள்ள ராமேஸ்வரம் கோவிலுக்கு காவடி தூக்கிச் சென்றதை குறிப்பிடும் விதமாக நடுகல்லில் இராமசேது என்று பொறித்திருக்கலாம் நடுகல்லில் வலது பக்கத்தில் காவடி சுக்கும் வீரனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது நடுகல்லில் நடுவே பெரிய சூலாயுதம் இடம் பெற்றுள்ளது . பொதுவாக சிவன் கோவிலுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலங்களின் எல்லையை குறிக்கும் அடையாளமாக சூலம் கல்லில் செதுக்கப்படும் . எனவே இக்கல்லில் செதுக்கப்பட்டுள்ள சூலாயுதம் ராம சேது என்ற வாசகம். காவடி எடுக்கும் வீரன் என மூன்றையும் பார்க்கும் பொழுது இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் கோவிலுக்கு காவடியாக காணிக்கைகளைக் கொண்டு சென்ற வீரனின் நினைவாகவோ அல்லது வழிபாட்டுக்கள் காவடி எடுத்துச் சென்ற வீரனின் நினைவாகவோ எடுக்கப்பட்ட நடுகல்லாக இருக்கலாம் . நடுகல்லின் அமைப்பு எழுத்தமைதி, வீரனின் உருவ அமைப்பு முதலானவற்றைக் கொண்டு இந்த காவடி நடுகல் 18ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்

### முடிவுரை

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காவடி தூக்கும் வீரன் அமைந்துள்ள நடுகல்லானது பண்ணை மூன்றடைப்பு கிராமம் தவிர பாலவனத்தம் முதல் இருக்கன்குடி செல்லும் சாலையில் அமைந்துள்ள கூத்திப்பாறை கிராமத்தில் அமைந்துள்ளது . அதிலும் வீரன் ஒருவன் காவடியில் இரண்டு பக்கமும் பெரிய சுமைகளைத் தூக்கிச் செல்வது போல் இடம் பெற்றுள்ளது . அந்த நடுகல் பெரு வணிகப் பாதையில் இடம் பெற்றிருந்தால் அது ஒரு வணிகச் சின்னமாக இருக்கலாம் என்று தொல்லியலாளர்கள் அடுத்து தெரிவித்திருந்தனர் . அதன் பிறகு அதே போன்ற காவடி வீரன் நடுகல் இப்பகுதியிலேயே கிடைத்திருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது இதன்மூலம் காவடி நடுகல் எடுக்கும் மரபானது இப்பகுதியில் ஒரு தொடர் நிகழ்வாக இருந்திருக்கலாம் என கருத இடமுண்டு

### பார்வை நூல்கள்


1. தொ. பரமசிவன், **பண்பாட்டு அசைவுகள்** , காலச்சுவடு, நாகர்கோவில் 2009.
2. பொ. இராஜேந்திரன், சொ. சாந்தலிங்கம், **வரலாற்று நோக்கில் விருதுநகர் மாவட்டம்**, பாண்டியநாடு வரலாற்று ஆய்வு மையம் மதுரை 2014.
3. சொ.ஸ்ரீதர், சி. செல்லப்பாண்டியன், வி**ருதுநகர் மாவட்டம் தொல்லியல் தடயங்கள்**, பாண்டியநாடு பண்பாட்டு மையம், மதுரை, 2022.
4. ஆ. சிவசுப்பிரமணியன், **ஆவணக் கொலைச் சாமிகளும் பெருமிதக் கொலை அம்மன்களும்**, காலச்சுவடு, நாகர்கோவில் 2022.
5. பண்ணை மூன்றடைப்பு கிராமம் கள ஆய்வு, கட்டுரை ஆசிரியர்.
6. தி.சுப்பிரமணியன், **தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு** , NCBH III பதிப்பு சென்னை 2018.